பக்கங்கள்: 13

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 தை 01 செவ்வாய்க்கிழமை 14.01.2025 கதிர் 068

## இனி இது ரகசியம் அல்ல!

தமிழ்நாடு செல்லும் வழியில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தடுக்கப்பட்டு 2 மணி நேரமாக அவரை அதிகாரிகள் தாமதிக்க வைத்தனர். அவருக்குப்பயணத் ☞ 2

# குற்றவியல் விசாரணைப் பிரிவுகளை மாகாண மட்டத்தில் நிறுவ தீர்மானம்

## பாதுகாப்பு அமைச்சர் அறிவிப்பு

மாகாண மட்டத்திலான குற்றவியல் விசாரணைப் பிரிவுகளை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொது பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜபால தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் தற்போதுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு மேலதிகமாக, மாகாண மட்டத்திலான குற்றவியல் விசாரணைப் பிரிவுகளை நிறுவுவது குறித்துக் கவனம் செலுத்தப்படுகிறது.

இதன் முதற்கட்டமாக ஏற்கனவே தென் மாகாணத்தில் குற்றவியல் விசாரணைப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது. இவ்வாறு குற்றவியல் விசாரணைப் பிரிவுகள் மாகாண ரீதியில் நிறுவப்படுவதற்கு காரணம், விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதை முறையாக விரைவு படுத்துவதே நோக்கமாகும்.

தற்போதைய நிலையில் முக்கிய சில விசாரணைகள் பொலிஸ்மா அதிபரின் நேரடி மேற்பார்வையின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்றார்.

# நல்லிணக்கத்தில் முழுமையடைந்த இலங்கையைக் கட்டியெழுப்புவோம்

## பிரதமர் ஹரினி பொங்கல் செய்தி



ஒருவரையொருவர் மதித்தல் மற்றும் மற்றவர்களின் மதம், கலாசார உரிமைகளை மதிக்கும் விசேட மனித பண்புகள் மற்றும் நல்லிணக்கத்தில் முழுமையடைந்த இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு இந்த தைப்பொங்கல் தினத்தில் நாம் மீண்டுமொரு ☞ 2

# மக்கள் முகங்களில் நீடித்த புன்னகையை கொண்டு வருவதற்காக ஒன்றிணைவோம்

## பொங்கல் தினத்தில் ஜனாதிபதி அழைப்பு



நாட்டிற்கும் மக்களுக்கும் பல நல்ல விடயங்களை நிறைவேற்ற நாம் உறுதி பூண்டுள்ளோம். இந்த நாட்டு மக்களின் முகங்களில் நீடித்த புன்னகையைக் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்ட இந்த செயற்பாட்டில் ஒற்றுமையுடன் ஒன்றிணைய அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறேன என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயகவின் பொங்கல் ☞ 8

# பொறுப்புக்களை நிறைவேற்றுவதே மக்களுக்குச் செலுத்தப்படும் நன்றி

## எதிர்க் கட்சித் தலைவர் பொங்கல் செய்தியில் இடித்துரைப்பு



ஒரு நாட்டின் மக்களுக்கான பொறுப்பை ஏற்றுள்ள ஆளும் கட்சிக்கு, பொதுமக்களின் பொறுப்புகளை நிறைவேற்றுவது என்பது, அந்த அதிகாரத்தை வழங்கிய மக்களுக்குச் செலுத்தப்படும் நன்றி என்று ☞ 8

# மாகாண சபை பற்றி விரைவில் உறுதியான தீர்மானம் எடுங்கள்

## தேர்தல்கள் ஆணையாளர் ஆளும் தரப்பிடம் வலியுறுத்து

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் உறுதியான தீர்மானத்தை விரைவாக எடுக்குமாறு ஆளும் தரப்பிடம் வலியுறுத்தியுள்ளோம். மாகாண சபைத் தேர்தல் சட்டத்தில் காணப்படும் சட்டச்சிக்கலுக்குத் தீர்வு கண்டால், உள்ளூராட்சிமன்றத் தேர்தலைத் தொடர்ந்து மாகாண சபைத் தேர்தலை நடத்தலாம் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்ரத்நாயக்க தெரிவித்தார்.

அவரிடம் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் குறித்து வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் திருத்தச் சட்டமூலம் முதலாம் வாசிப்புக்காக நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டுள்ளது. சட்டமூலத்தை உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்த காலவகாசம் வழங்கப்பட்டுள்ளது. ஒருவேளை சட்டமூலம் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்டால் நீதிமன்றத்தின் வியாக்கியானம் கிடைக்கும் வரை காத்திருக்கவேண்டும்.

நீதிமன்றத்தின் வியாக்கியானத் ☞ 2




**அன்பர்கள், நண்பர்கள், வாசகர்கள் அனைவருக்கும் எமது தைத்திருநாள் வாழ்த்துக்கள்!**

தைத்திருநாள் விடுமுறை காரணமாக இன்றைய தினம் மாலைக்கதிர் பத்திரிகையும் நாளையதினம் காலைக்கதிர் பத்திரிகையும் வெளிவராது..

# ஐ.தே.கட்சி – ஐக்கிய மக்கள் சக்தி இணைப்புக்கு ஹிருணிகா எதிர்ப்பு

## பாதுகாப்பு அமைச்சர் அறிவிப்பு

ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்திக் கட்சியும் இணைவதில் எனக்கு உடன்பாடு இல்லை. கட்சியை மறுசீரமைப்பு செய்து கட்சியின் தலைவர் தனது தவறுகளைத் திருத்திக்கொண்டால் ஐக்கிய மக்கள் சக்திக்கு எவரினதும் ஒத்துழைப்பு அவசியமில்லை என அந்தக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்துள்ளார்.

அவர் நேற்றுக் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் செய்தியாளர்களிடம் உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார்.

கேள்வி: - ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சியுடன் ☞ 8

# சஜித்தின் தலைமையை ஏற்றால் ஐதேகவுடன் இணைவு சாத்தியம்

## நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன தெரிவிப்பு

ஐக்கிய மக்கள் சக்தித் தலைவர் சஜித் பிரேமதாசவின் தலைமையையேற்றுக்கொண்டால் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவது சாத்தியமாகும். இல்லையேல் இது ☞ 8

# இறக்குமதி மருந்துகளை பரிசோதிக்க ஆய்வகங்கள் விரைவில் நிறுவப்படும்

## சுகாதார அமைச்சு செயலர் தெரிவிப்பு

கொள்வனவு செய்யப்படும் மருந்துகளை பரிசோதனைக்கு உட்படுத்துவது தொடர்பில் விரைவில் பல ஆய்வகங்களை நிறுவுவதற்கு ஆளும்தரப்புத் திட்டமிட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

மருந்துகளின் தரம் தொடர்பில் குறிப்பிட்ட முறைப்பாடுகளுக்கு ☞ 8

# மருத்துவத்துறையிலுள்ள பிரச்சினைகளை சரிசெய்ய அர்ப்பணிப்போரை பாதுகாப்பேன்

## சுகாதாரத்துறை அமைச்சர் உறுதியளிப்பு

மருந்துத் துறையில் உள்ள பிரச்சினைகள் மற்றும் குறைபாடுகளைத் தீர்ப்பதற்கும் சரிசெய்வதற்கும் அர்ப்பணிப்புடன் செயல்படும் அனைத்து ஊழியர்களையும் ஊக்குவித்து பாதுகாப்பேன் என்று சுகாதார அமைச்சர் வைத்தியர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

மருந்துத் துறை இன்று உலகில் அதிக இலாபம் ஈட்டும் தொழிலாகவும், ஒரு மோசடியாகவும் மாறிவிட்டதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

நாரஹேன்பிட்டவில் உள்ள 'மெஹெவர பியச' அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள அரச மருந்தகக் கூட்டுத்தாபன அலுவலகத்திற்கு திடீர் கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்ட போது சுகாதார அமைச்சர் வைத்தியர் நலிந்த ஜயதிஸ்ஸ இதனை தெரிவித்தார்.

இந்த நிறுவனத்தின் ☞ 8

## இனி இது .....

தடை இருப்பதாக குடிவரவு, வெளியகல்வு அதிகாரிகளும் பின்னர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரும் தெரிவித்திருந்தாலும் அப்படிப்பட்ட நீதிமன்றத் தடை உத்தரவு எதனையும் அவர்கள் காட்டவில்லை.

சிறீதரன் எதற்காக இந்தியா செல்கிறார் என்பது குறித்து அறிவதிலேயே அவர்கள் குறியாக இருந்தனர் என்று கூறப்படுகின்றது. அதற்கான பின்னணிக் காரம் குறித்த சில தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையிலும் இந்தியாவிலும் தடை செய்யப்பட்ட கனடா ஈழத் தமிழர் தேசியக் கவுன்ஸில்என்றஅமைப்புஒன்றின்ஏற்பாட்டில் சமஷ்டி குறித்து இந்தியாவில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளமாநாட்டுஏற்பாடுகளுக்காக சிறீதரன் இந்தியா செல்கிறாரா என்கிற அச்சமே அதிகாரிகள் அவரை விமான நிலையத்தில் வைத்து உருட்டியதற்கான காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மாநாட்டுக்கான முன்னோடிக் கூட்டம் ஒன்று நாடாளுமன்ற உறுப்பினர் குகதாசனின் ஏற்பாட்டில் இலங்கையில் அண்மையில் இடம்பெற்றிருந்தது. அதில் கனடா பல்கலைக்கழகம் ஒன்றின் கல்வியலாளர்கள் கலந்துகொண்டு விளக்கமளித்திருந்தனர். இருந்தாலும் இந்தக் கூட்டத்திற்கான பின்னணியிலும் கனடா ஈழத் தமிழர் தேசியக் கவுன்ஸிலே இருந்தது என்று இலங்கைப் புலனாய்வாளர்கள் கருதுகின்றனர்.

இப்படி தடை செய்யப்பட்ட அமைப்பின் பின்னணியோடுநடக்கும்ஒருமாநாட்டுக்கான ஏற்பாடுகளுக்காக சிறீதரன் செல்கிறாரோ என்கிறசந்தேகம்தான்அவரைதடுத்துவிசாரிக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்ததற்கான காரணம் என்றும் சொல்லப்படுகின்றது.

ஆளும்தரப்பின் உயர் மட்டங்களுக்கும் தெரியப்படுத்தப்பட்ட பின்னரே சிறீதரனை மறித்து விசாரிப்பதற்கு அதிகாரிகள் முடிவெடுத்தனர் என்றும் கூறப்படுகின்றது. இருந்தாலும் தமிழ்நாட்டில் நடக்கும் 'திசையெட்டும் தமிழணங்கே' நிகழ்வில் கலந்துகொள்வதற்காகத்தான் அவர் அங்கு செல்கிறார் என்று உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் அவரது பயணத்திற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது.

..................................................

இலங்கைத் தமிழ அரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் எதிர்வரும் ஜனவரி 18 தலைவர் சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ளது. திருகோணமலையில் உள்ள சிவில் அமைப்பொன்றின் கேட்போர் கூடத்தில் காலை பத்து மணிக்கு கூட்டம் ஆரம்பமாகவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கட்சிக்கு எதிராகத் தொடுக்கப்பட்டுள்ள வழக்கு, கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களுக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ளஒழுக்காற்றுநடவடிக்கைகள் பற்றி முக்கியமாக ஆராயப்படவுள்ளது. மட்டக்களப்பில் நடைபெறவுள்ள மாநாடு உள்ளிட்ட விடயங்கள் பற்றியும் ஆராயப்படவுள்ளது. உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது.

இதேநேரம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் முன்னெடுத்து வரும் புதிய அரசமைப்பு முயற்சிக்கான விடயத்தினை தமிழ்க் கட்சிகள் கூட்டாக கையாளுதல் என்ற விடயத்தில்தமிழ்அரசுக்கட்சியின் நிலைப்பாடு தொடர்பிலும், அதாவது அந்தக் கூட்டத்தில் கட்சி கலந்துகொள்ளவேண்டுமா இல்லையா என்பது தொடர்பிலும் ஆராயப்படவுள்ளது.

இதற்கிடையே, ஜனவரி25கஜேந்திரகுமார் கூட்டியுள்ள கூட்டத்தில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினரும் கலந்துகொள்வர் என்று புளொட் தலைவர் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார். இந்தக் கூட்டத்திற்கு யாரை அழைத்து வருவது என்பதை செல்வம் அடைக்கலநாதனும் சிறீதரனும் முடிவு செய்யலாம் என்று கஜேந்திரகுமார் தெரிவித்திருந்தார். அதனடிப்படையில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினர் செல்வத்தாருடன் இணைந்து கூட்டத்திற்குச் செல்லவுள்ளனர்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## மாகாண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துக்கு அமைய சட்டமூலம் வெகு விரைவாக நிறைவேற்றப்பட்டால் புதிய திருத்தத்துக்கு அமைய தேர்தலுக்கான பணிகளை முன்னெடுத்து வேட்பு மனுத்தாக்கலைக் கோருவோம். ஏப்ரல் மாதமளவில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

எவ்வாறு இருப்பினும் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டதன் பின்னரே அடுத்தகட்ட பணிகளுக்குத் திகதி தீர்மானிக்க முடியும். ஆகவே சட்டமூல உருவாக்கத்தை விரைவுபடுத்துமாறு ஆளும்தரப்பிடம் வலியுறுத்தியுள்ளோம். விரைவாகத் தேர்தலை நடத்துவதற்கான இயலுமை காணப்படுகிறது.

மாகாண சபைத் தேர்தல் சட்டத்தில் காணப்படும்சட்டச்சிக்கலுக்குத்தீர்வுகாணுமாறு ஆளும்தரப்பிடம் வலியுறுத்தியுள்ளோம். அத்துடன் தேர்தல் முறைமை தொடர்பில் தெரிவுக்குழுக்களிடம் எமது யோசனைகளை முன்வைத்துள்ளோம். காணப்படும் சட்டச் சிக்கலுக்குத் தீர்வுக் கண்டால் உள்ளூராட்சிமன்றத் தேர்தலைத் தொடர்ந்து மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியும்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் அனைத்து அரசியல் கட்சிகளுடன் வெளிப்படைத்தன்மையுடன் பேச்சு நடத்தத் தயாராகவுள்ளோம். காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளமாகாணசபைத் தேர்தலை வெகுவிரைவில் நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளோம் என்றார்.

## நல்லிணக்கத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறை உறுதிகொள்வோம் என்று பிரதமர் கலாநிதி.ஹரிணி அமசூரிய தெரிவித்தார்.

பிரதமர் வெளியிட்டுள்ள தைப்பொங்கல் வாழ்த்துச் செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளதோடு அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஒருவரைஒருவர்மதித்தல்மற்றும்கைமாறு மறவாத உன்னத பண்புகள் என்பனவற்றைக் கொண்ட தமிழ் மக்களால் ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதம் கொண்டாடப்படும் தைப்பொங்கல் பண்டிகையானது உண்மையான கலாசார மதிப்பீடுகளை இவ்வுலகிற்கு எடுத்துரைக்கின்றது.

நாற்று நடுவது முதல் விளைச்சலை அறுவடை செய்வதுவரை விவசாய நடவடிக்கைகளுக்கு சூரிய பகவான் உட்பட இயற்கை ஜீவராசிகள் அனைத்தும் செய்யும் உதவிகளுக்கு நன்றி செலுத்தவே இந்த பண்டிகை கொண்டாடப்படுகிறது .

நாம் அனைவரும் இயற்கையின் படைப்புக்கள். இயற்கையை மீறி எம்மால் எந்த பயணத்தையும் மேற்கொள்ள முடியாது. இதனால் இயற்கையினூடாக எமக்கு கிடைக்கப்பெற்றஆசீர்வாதங்களுக்குகைமாறு செய்வது மிகவும் உன்னதமான மனிதப் பண்பாகும். நாடு என்ற அடிப்படையில் நாம் விசேட மைல்கற்களை எட்டியுள்ளோம். கட்டமைப்பு மற்றும் கொள்கை ரீதியிலான மாற்றம் உட்பட, மனநிலையிலும் மாற்றத்தை ஏற்படுத்தி மறுமலர்ச்சி யுகத்தை நோக்கி நாட்டைக் கொண்டு செல்லும் பாரிய மற்றும் பாரதூரமான பொறுப்பு எமக்கு உள்ளது. அரசாங்கம் மற்றும் அரசு என்ற அடிப்படையில் நாம் அந்த சவால்கள் நிறைந்த மற்றும் பொறுப்புவாய்ந்த செயற்பாடுகளை முன்னெடுத்துபரிணாமமாற்றத்தைநோக்கிய பயணத்தை ஆரம்பித்துள்ளோம்.

அவ்வாறான தருணங்களில் இயற்கையைப் போற்றி அதற்கு நன்றி செலுத்தும் இத்தகையதொரு அற்புதமான பண்டிகையைக் கொண்டாடுவது, மீண்டுமொரு முறை கலாசார ரீதியிலான செழிப்பான பிரஜைகளை உருவாக்குவதற்கு அடிப்படையாக அமையும். .

தைப்பொங்கல் பண்டிகையைக் கொண்டாடும் இலங்கை வாழ் மற்றும் உலக வாழ் தமிழ் சமூகத்தின் அனைத்து பிரார்த்தனைகளும் நிறைவேறும் மகிழ்ச்சிகரமான தைப்பொங்கல் தினமாக இன்றைய தினம் அமைய வேண்டுமென மனப்பூர்வமாக வாழ்த்துகின்றேன்



# கிலோவுக்கு ரூ. 125 நெல்லுக்கு விலை

## வவுனியா கூ.சங்கம் தீர்மானம்

வவுனியா பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தால் உலர்ந்த நெல்லை கிலோ ஒன்றுக்கு 125 ரூபா வீதம் கொள்வனவு செய்வதற்கு தீர்மானித்து உள்ளதாக சங்கத்தின் தலைவர் ந. ஸ்ரீஸ்கந்தராஜா தெரிவித்தார்

இது தொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில் -

தற்போதைய காலபோக நெற்செய்கை அறுவடை ஆரம்பித்துள்ளது. இந்நிலையில் எமது விவசாயிகளின் நன்மை கருதியும் பலநோக்கு கூட்டுறவு சங்கங்களால் விவசாயிகளுக்கு செய்யக்கூடிய உதவியாகவும் உலர்ந்த நெல்லை கிலோ ஒன்றுக்கு 125 ரூபா வீதமும், காயாத நெல்லை 115 ரூபா வீதம் கொள்வனவு செய்வதற்கு வவுனியா பலநோக்கு கூட்டுறவு சங்கம் தீர்மானித்துள்ளது.

இதன் பிரகாரம் எதிர்வரும் பொங்கல் தினத்திற்கு பின்னர் வவுனியா பலநோக்கு கூட்டுறவு சங்கம் நெல்லை கொள்வனவு செய்ய உள்ளது.

விவசாயிகள் வவுனியா பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்கு நெல்லை வழங்க விரும்பின் ஓமந்தை, ஆறுமுகத்தான்புதுக்குளம், கல்நாட்டியகுளம், ஈச்சங்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் களஞ்சியசாலைகளில் நெல்லை கையளிப்பதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதேவேளை, வவுனியாவின் சங்கத்திற்குரிய கட்டடங்களிலும் நெல்லை களஞ்சியப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதன் காரணமாக சுமார் 2,700 மெற்றிக்தொன்னுக்கும் அதிகமான நெல்லை இம்முறை வவுனியா பலநோக்குகூட்டுறவுசங்கம் கொள்வனவு செய்வதற்குத் தீர்மானித்துள்ளது. 100

# ஔவையார் நினைவு தினம் வவுனியாவில் அனுஸ்டிப்பு

ஔவையாரின் நினைவு தினம் வவுனியா, சின்னப் புதுக்குளம், மாமடுவ சந்தியிலுள்ள ஔவையாரின் சிலையடியில் நேற்று (திங்கட்கிழமை) இடம் பெற்றிருந்தது.

இதன்போது ஔவையாரின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மலர் அஞ்சலியும் செய்யப்பட்டிருந்ததுடன் தமிழ்மணி அகளங்கன் மற்றும் மாணவர்களால் நினைவு பேருரைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தள.

வவுனியா நகரசபையின் ஏற்பாட்டில் தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார் கண்ணன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். 100





# வவுனியாவில் களை கட்டிய தைப் பொங்கல் வியாபாரம்

உழவர் திருநாளாம் தைப்பொங்கல் தினத்தை கொண்டாடுவதற்கு மக்கள் தயாராகி வரும் நிலையில் வவுனியாவில் பொங்கல்வியாபாரம்களைகட்டியுள்ளது.

இன்று (செவ்வாய்க்கிழமை) உழவர் தினமான தை முதலாம் திகதி பிறக்கவுள்ள நிலையில் தை பிறந்தால் வழிபிறக்கும் என்ற வாக்கிற்கிணங்க தைப்பொங்கலை மக்கள் சிறப்பாக கொண்டாடவுள்ளனர்.

வவுனியா நகரப்பகுதியில் அதிக சன நெரிசல்காணப்படுவதுடன் பொங்கலுக்கு தேவையான பானை, அகப்பை, கரும்பு, பட்டாசு, பழவகைஎன்பவற்றின் விற்பனை சூடு பிடித்துள்ளது.

தைப்பொங்கல் திருநாள் இன்று (செவ்வாய்க்கிழமை) உலகளாவியரீதியில் கொண்டாடப்படவுள்ள நிலையில்




வவுனியாவில் தைப்பொங்கல் பண்டிகை களைக்கட்ட ஆரம்பித்துள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது.

அத்துடன் கடந்த வருடத்தை விட இம்முறை மக்கள் அதிக ஆர்வத்துடன் பொங்கல் பொருள்களைக் கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டி வருவதாக வவுனியா வர்த்தகர்கள் தெரிவித்தனர். 100







# வீதி விபத்தில் இருவர் கிளிநொச்சியில் காயம்

பரந்தன் பகுதியில் இருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த ஓட்டுனர் பயிற்சி பாடசாலையின் ஓட்டோ, பரந்தன் அதே பகுதியில் இருந்துபயணித்த மோட்டார் சைக்கிளின் பின்புறம் ஓட்டோ மோதுண்டதில் அதன் பின்புறமாக வந்த மோட்டார் சைக்கிளும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகின.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலீஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். 113







காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இந்தத் தைத் திருநாளாவது இனிமையைத் தந்து நிற்கட்டும்

தை பிறந்திருக்கின்றது. வழியும் பிறக்கவேண்டும் என்கிற தமிழர்களின் எதிர்பார்ப்போடு இன்றைய நாள் விடிந்திருக்கின்றது.

போராலும் கொரோனாவாலும் பின்னர் பொருளாதார நெருக்கடியாலும் கடுமையாகப் பாதிக்கப்பட்ட தமிழர்கள் தமக்கான விடிவோடு இந்தத் தைத் திருநாளாவது பிறக்கவேண்டும் என்று பெரும் எதிர்பார்ப்போடு இருக்கின்றார்கள்.

இலங்கையில்தமிழர்களின்பிரச்சினைகள், விருப்புக்கள், வேணவாக்களுக்கான தீர்வுக்கான கடந்த 70 ஆண்டு கால முயற்சிகளில் ஒவ்வொரு வருடமும் எதிர்பார்த்து எதிர்பார்த்துச் சோர்ந்து போனாலும் தை பிறந்தால் வழியும் பிறக்கும் என்கிற தமது நம்பிக்கையை மட்டும் தமிழர்கள் இன்னும் இறுகப் பற்றிப் பிடித்திருக்கின்றார்கள்.

கடந்த ஆண்டு தெற்கு அரசியலில் ஒரு பெரும் மாற்றம் இடம்பெற்றுள்ளது. பாரம்பரியமான அரசியல் கட்சிகள், அவற்றின்வழிவந்தகட்சிகள்என்றுஅனைத்தையும்சிங்கள மக்கள் ஒட்டுமொத்தமாகப் புறமொதுக்கி இருக்கின்றார்கள். தேசிய மக்கள் சக்தி என்கிற புதிய ஆட்சியாளர்களின் கைகளில் அதிகாரத்தை ஒப்படைத்திருக்கின்றார்கள். அதுவும் வரலாற்றில் என்றுமில்லாத வகையில் மூன்றில் இரண்டுக்கும் அதிகமான நாடாளுமன்றப் பலத்துடன் அவர்கள் தேசிய மக்கள் சக்தியை ஆட்சியில் அமர்த்தியிருக்கின்றார்கள்.

சிங்களமக்கள்மட்டுமன்றிதமிழ், முஸ்லிம்மக்களும்இந்த மாற்றத்தில் கணிசமாக இணைந்திருக்கிறார்கள். வடக்கு கிழக்கிலும் அவர்களுக்கு ஆதரவு கிடைத்திருக்கின்றது. ஏற்கனவே ஆளும் தரப்புக்களுக்கும் அவற்றோடு சேர்ந்து நிற்கும் தரப்புக்களுக்கும் வாக்களித்து வந்த தமிழ், முஸ்லிம் மக்களே தற்போது தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்துள்ளார்கள் என்று தமிழ் தேசிய சக்திகளின் கருத்தைக் கவனத்தில்கொண்டால்கூட தமிழ் மக்களும் மாற்றத்தில் இணைந்திருக்கிறார்கள் என்பதே அதன் பொருள்.

அதற்குக் காரணம் கடந்த 70 வருடங்களில் இல்லாத புதிய அரசியல் பாதை ஒன்று இலங்கையில் ஏற்படவேண்டும் என்பதும், தமிழர்களின் பிரச்சினைக்கு நியாயமான, ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தீர்வு காணப்படவேண்டும் என்பதும்தான். அந்த மாற்றத்தை நிகழ்த்துவதற்கான அனைத்து வாய்ப்புக்களையும் பலத்தையும் தேசிய மக்கள் சக்தி கொண்டிருக்கும் நிலையிலும், பிரச்சினைக்கு ஒரு நியாயபூர்வமான தீர்வை வழங்கவேண்டும் என்கிற அணுகுமுறையைக் கொண்டிருக்கின்ற அரசுத் தலைவராக அநுரகுமார திசநாயக்க பதவியில் இருக்கின்ற நிலையிலும் இந்த முறை வாய்ப்புத் தவறினால் இனியொருபோது இதுபோன்ற வாய்ப்புக் கிடைப்பது அபூர்வம் என்பதாலும் இந்தத்தைத்திருநாள்நல்லசெய்திகளோடுபிறக்கவேண்டும் என்பதுதான் தமிழர்களின் எதிர்பார்ப்பு.

இந்த ஆண்டில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் ஆளும் தரப்பினர் வாக்குறுதியளித்துள்ளனர். விரைவில் அதை அவர்கள் நிறைவேற்றுவார்கள் என்று நம்பும் அதேவேளை, புதிய அரசமைப்பு ஒன்றின் மூலம் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முயற்சியின் முதல் கட்டமாக தமிழர் தரப்புடனான பேச்சுக்களை ஆளும்தரப்பு இந்த ஆண்டில் தொடங்கி தீவிரமாக அர்ப்பணிப்போடு அதில் முன்னேறவேண்டும். குறைந்தபட்சம் இந்தத் தைத் திருநாளின் நற்செய்தியாக அதுவே தமிழர்களுக்கு இனிமை தருவதாக அமையும்.



## குடும்ப உறவுக்கு உரமிடும் தமிழர் திருநாள் தைப்பொங்கல் பண்டிகை!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

தை மாதப் பிறப்பை வரவேற்குமுகமாகவும் விவசாயத்துக்கு உதவிய சூரியன் விவசாயிகள் மற்றும் கால்நடைகளுக்கு நன்றி கூறும் முகமாகவும் தைப்பொங்கல் விழா கொண்டாடப்படுகிறது .

குடும்பத்துடன் ஒற்றுமையாக கொண்டாடும் ஒரு பண்டிகையாக தைப்பொங்கல் பண்டிகை திகழ்கின்றது.

தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் பெருவிழா இன்று(14) செவ்வாய்க்கிழமை தமிழர் வாழும் பட்டிதொட்டி எல்லாம் நடைபெறுகிறது .

இது ஓர் அறுவடைப் பண்டிகை ஆகும். இந்த விழா தென்னிந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், ஐரோப்பிய நாடுகள், வட அமெரிக்கா, தென் ஆப்பிரிக்கா, மொரிசியசு என தமிழர் வாழும் அனைத்து நாடுகளிலும் கொண்டாடப்படுகிறது.

உலகமே உணவை நம்பி இருக்கிறது. அதற்கு அடிப்படை விவசாயம் ஆகும். விவசாயத்துக்கு முக்கியமாக விவசாயி தேவை. இரண்டுக்கும் முக்கியமானவன் சூரியன் .

அந்த சூரியனை நன்றியோடு நினைந்து வழிபடுகின்ற இயற்கை திருவிழா.

உழவு இல்லையேல் உலகில்லை. விவசாயத்திற்கு உதவி செய்யும் கால்நடைகள் ஆகிய அனைத்திற்குமே நன்றி செலுத்தி வழிபடுவது வழக்கம்.

பொங்கல் பண்டிகை, தைத் திருநாள் கொண்டிருக்கும் ஆன்மீக ரீதியான முக்கியத்துவம்

இதே போல ஒரு பக்கம் வாழ்க்கை முறையோடு இணைந்திருக்கும் இயற்கைக்கு நன்றிசெலுத்தும்ஒருமிகப்பெரியபண்டிகையாக பொங்கல் பண்டிகை ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்பட்டு வருகிறது.

பொங்கல், உழைக்கும் மக்கள் இயற்கைத் தெய்வமாகக் கருதப்படும் சூரியனுக்கும், மற்ற உயிர்களுக்கும் சொல்லும் ஒரு நன்றியறிதலாகக்கொண்டாடப்படுகிறது. இந்தப் பண்டிகைஇந்துகடவுளானசூரியதேவனுக்கும் இயற்கைக்கும் அர்ப்பணிக்கப்பட்டது.

'தை பிறந்தால் வழி பிறக்கும் ' என்பது பன்னெடுங்காலமாக நம் நாட்டில்

வழக்கத்தில் உள்ள பழமொழியும் பொன்மொழியுமாகும். கிராமத்தில் இன்றளவும்

தைக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுப்பார்கள். எதுவாக இருந்தாலும் தை

பிறக்கட்டும் பார்த்துக் கொள்ளலாம் என்பார்கள்.

கல்யாணம் பேச தை வரட்டும். ஜாதகம் பார்க்கலாம் என்று சொல்வார்கள்.



வள்ளுவரும் அதனை அழகாக கூறியிருக்கின்றார்.

இயற்கையையே தெய்வமாக வழிபட்டு வந்த முன்னோர்களின் பாரம்பரியம் தற்போது 2025 பொங்கல் பண்டிகை வரை வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது.

விவசாயத்திற்கு ஆதாரமான சூரியன், மழைக்கு அதிபதியான இந்திரதேவன் மற்றும்



கொடுக்கவேண்டியகாசுக்கும்வரவேண்டிய பணத்துக்கும் தை மாதத்தை எதிர்பார்ப்பார்கள். ஏனென்றால் தையில்தான் அறுவடை முடிந்து கையில் காசு பணம் புரளும். சுப விசேஷங்களுக்கு தை மாதம் மிகவும் சிறந்தது. கல்யாணம் நிச்சயதார்த்தம் வளைகாப்பு கிரகப்பிரவேசம் என எல்லா சுபநிகழ்ச்சிகளுக்கும் இந்த மாதத்தில் குறைவிருக்காது.

புத்தாண்டு அல்லது புது வருடம் என்பது புதிய நாட்காட்டி வருடம் தொடங்குவதைக் குறிக்கிறது. ஆனால் பெரும்பான்மையான கலாச்சாரங்களில் புதுவருடத்தொடக்கம் கொண்டாடப்படுகிறது. உலகம் முழுவதும் தற்காலத்தில் உபயோகித்து வரும் கிரெகொரியின் நாட்காட்டியின்படி புது வருடமானது ஜனவரி மாதம் முதல் தேதி தொடங்குகிறது. ஆனால் தமிழுக்கு புதிய வருடம் தை ஒன்றில் பிறக்கிறது. அது

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர் Kalaikkathir

# குடும்ப...

4ம் பக்கத் தொடர்ச்சி...........

இன்று ஆகும்.

ஆடி மாதத்தில் தேடி விதைத்த பயிர்களின் விளைச்சலை அறுவடை செய்து பயன் அடையும் பருவமே தை மாதம் ஆகும். அந்த அறுவடையில் கிடைத்த நெல்லின் புத்தரிசியைச் சர்க்கரை, பால், நெய் சேர்த்துப் புதுப் பானையிலிட்டுப் புத்தடுப்பில் கொதிக்க வைத்துப் பொங்கல் பொங்கி சூரியனுக்கும்



மாட்டுக்கும் படைத்து உண்டு மகிழும் விழாவே பொங்கல் விழாவாகும்.

## பொங்கல் நேரம்!

இந்த வருடத்தில் பொங்கலி டுகின்ற நேரமாக காலை 5 மணி முதல் 6.40 மணி வரையாகும். தவறினால் 7:30 மணி முதல் எட்டு முப்பது மணி வரை அதுவும் தவறினால் 10:30 முதல் 12 30 வரை பொங்கல் இட்டு படைக்கலாம்.

பொங்கல் பொங்கி வழியும் நேரம் 'பொங்கலோ பொங்கல்..' என்று கூறி சங்கு நாதம் எழுப்பி வழிபடுதல் வேண்டும்.

பொங்கலை எவ்வாறு கொண்டாடுகிறோம்?

அன்று அதிகாலையில் எழுந்து நீராடி புத்தாடை அணிந்து விபூதி தரித்து திலகமிட்டு புதுப் பானையை அலங்கரித்து மஞ்சள் இஞ்சி கட்டி சாமியறையில் வைத்து வழிபட்டு பின்னர் அடுப்பில் ஏற்றவேண்டும்.

உறவினர்கள்,நண்பர்கள், அனைவரையும் வரவழைத்து விளையாட்டுகள் வைத்து அன்று மிக மிக மகிழ்வான தருணங்களாக இருக்கும்.

குறிப்பாக கபடி,வழுக்கு மரம்,பானை உடைத்தல் போன்ற விளையாட்டுகளை விளையாடுவார்கள்.

## பொங்கல் வகைகள்

தமிழர்களின் திருநாளாம் பொங்கல் பண்டிகை நான்கு நாட்கள் கொண்டாடப்படும் .

1.போகிப் பொங்கல்
2.தைப்பொங்கல்
3.மாட்டுப்பொங்கல்
4.காணும் பொங்கல்

## 1.போகிப் பொங்கல்

நம் வீட்டில் உள்ள பழையவற்றை போக்கி, வீட்டை தூய்மை படுத்துவதே போகிப்பண்டிகை என்பார்கள் பொதுவாக. உண்மையில் எமது அகத்தில் மனத்தில் இருக்கிற கெட்ட தீய எண்ணங்களை அகற்றுவதே அதன் நோக்கமாகும்.

இது பொங்கல் பண்டிகையின் முதல் நாள் ஆகும். அது ஜனவரி 13 ஆம் திகதி போகி கொண்டாடப்படுகிறது.

## 2.தைப்பொங்கல்

புதுப்பானையில் புதிய அரிசியை இட்டு பொங்கல் இடுவர். விவசாயத்துக்கு காரணமாக இருந்த கதிரவனுக்குசூரியபொங்கல்படைப்பர்.வெண்பொங்கல், சர்க்கரை பொங்கல் என இரு பானைகளில் பொங்கல் பொங்கி வழிபடுவது வழக்கம்.ஒவ்வொரு ஆண்டும் தமிழுக்கு தை முதல் நாளில் கொண்டாடப்படுகிறது .அதாவது இவ் வருடத்தில் இன்று செவ்வாய்க்கிழமை பொங்கல் கொண்டாடப்படுகிறது.

## 3.மாட்டுப்பொங்கல்.

மூன்றாவது நாள் மாட்டுப்பொங்கலை கொண்டாடுவார்கள்.இந்நாளில் தமிழகத்தில் ஜல்லிக்கட்டு சில இடங்களில் வீர விளையாட்டாக நடைபெறும்.ஒவ்வொரு ஆண்டும் தை இரண்டாம் நாளில் மாட்டுப்பொங்கல் கொண்டாடப்படுகிறது.

இவ் வாண்டு மாட்டுப்பொங்கல் காலை ஒன்பது



மணி முதல் 10 .20 வரை அல்லது 11 மணி முதல் 12 30 வரை தவறினால் 1.30 முதல் 2.30 வரை கொண்டாடலாம்.

அன்று முன்னோர்கள் மூத்தவர்கள் நினைவாகவும் வழிபடலாம். கோசாலை சென்று பசுவை கழுவி அலங்கரித்து பசுவுக்கு உணவளித்து கொண்டாடலாம்.

## 4.காணும் பொங்கல்

நான்காம் நாள் காணும் பொங்கலாகும். இந்நாளில் நண்பர்களும் உறவினர்களும் ஒருவரை ஒருவர் காணும் நாளாகும்.ஒவ்வொரு ஆண்டும் தை மூன்றாம் நாளில் அதாவது வியாழக்கிழமை காணும் பொங்கல் கொண்டாடப்படுகிறது.

அதே நேரத்தில், தைத்திருநாள் என்பது ஜோதிட ரீதியாகவும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நாளாகும்.

தேவர்களின் இரவு காலமான தட்சிணாயன காலம் மார்கழி மாத இறுதி நாளோடு முடிகிறது. தை மாதம் ஒன்றாம் தேதி சூரியன் தனுசு ராசியில் இருந்து மகர ராசிக்கு செல்வார். சூரியன் மகர ராசிக்கு பெயர்ச்சியாகும் அன்றுதான் தை 1, பொங்கல் திருநாளாக கொண்டாடப்படுகிறது.

இது தான் வட மாநிலங்களில் மகர சங்கராந்தி என்றும், தென் மாநிலங்களில் ஒரு சில இடங்களில் சங்கராந்தி என்றும் அழைக்கப்படுகிறது. மகர சங்கராந்தி என்பது தேவர்களின் பகல் காலத் தொடக்கமான உத்திராயண புண்ணிய காலத்தை குறிக்கிறது.

இத்தனை சிறப்பு மிக்க பொங்கல் திருநாள் அன்று அனைவரும் பாரம்பரிய முறையில் பொங்கல்



# ரோஹிங்யா அகதிகளுக்கு அரசு கருணை காட்டட்டும்

## உமர் அலி ரணிஸ் வேண்டுகோள்

(ஹலால்தீன் )

கடந்த 2024.12.18 ஆம் திகதி இலங்கையில் புகலிடம் கோரி மியன்மார் ரோஹிங்கியா அகதிகள் இலங்கை வடக்கு முல்லைத்தீவு கடற்பரப்பில் தத்தளித்துக் கொண்டிருந்த வேளைபாதுகாப்பாகமீட்கப்பட்டிருந்தனர்.

தற்போது சட்ட நடவடிக்கைகள் நிறைவு பெறும் வரை முல்லைத்தீவு கடற்படை முகாமில் தங்கவைக்கப்பட்டதுடன் அவர்களை எவரும் பார்வையிட அனுமதி வழங்கப்படவில்லை எனவும், அவர்கள் விசாரணை நிறைவுற்றவுடன் நாடுகடத்துவதற்கும் அரசு திட்டமிடுவதாக சர்வதேச ஊடகம் வாயிலாக அறிய முடிகிறது.

கடந்த காலங்களில் மியன்மார் அரசு அங்கு வாழ்கிற ரோஹிங்கியா முஸ்லிம்கள் தொடர்பில் சர்வதேச சட்டங்கள் மற்றும் மனித உரிமை மீறும் வகையில் மிலேச்சத்தனமான தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். இதன் எதிரொலியாக ரோஹிங்யா முஸ்லிம்கள் தமது உயிர்களையும் உடைமைகளையும் பாதுகாத்துக்கொள்ள அயல் நாடுகளில் புகலிட கோரிக்கையை முன்வைத்து பல லட்சக்கணக்கானோர் இடம்பெயர்ந்து வருகின்றனர்.

இவ்வாறான காரணங்களுக்காக தற்போது எமது நாட்டிற்கு புகலிடம் தேடி 103 பேர் வந்திருக்கும் ரோஹிங்யா அகதிகளை இலங்கை அரசு மீண்டும் அனுப்பாது அவர்களுக்கான 'வாழ்உரிமை' அளிக்க வேண்டும். என முன்னால் கிண்ணியா நகர சபை உறுப்பினர் உமர் அலி ரணிஸ் ஊடகமொன்றிற்கு கருத்து தெரிவித்தார்.

2017 முதல் 2024 ஆண்டு வரையான காலப்பகுதியில் மியன்மாரின் இனவாதக் குழுக்கல் கட்டவில்துவிடப்பட்ட வன்முறைகளால் 25,000 மேற்பட்டோர் சொந்த நாட்டிலே படுகொலை செய்யப்பட்டதுடன் 2.5 மில்லியனுக்கு அதிகமான ரோஹிங்யா முஸ்லிம்கள் சொந்தநாட்டைவிட்டே வெளியேறினர்.

ஐ.நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயம் சர்வதேச புகலிட கோரிக்கையாளர்களின் விடயத்தில் சிறப்பாக செயலாற்றுவதையிட்டு பாராட்டினார்.



இலங்கை வந்துள்ள மியன்மார் ரோஹிங்யா அகதிகள் தொடர்பில் ஐ. நாட்டு அகதிகள் உயர் ஸ்தானிகராலய இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி மார்க் அன்ட்ரே ப்ரென்ச் அவர்களின் முனைப்பும் பாராட்டத்தக்கவை எனக் குறிப்பிட்டார்.

1948 ஆம் ஆண்டு மனித உரிமைகள் தொடர்பான ஐ.நா பிரகடனத்தில் 14 ஆவது சரத்தில் ' தங்கள் சொந்த நாடுகளின் துன்புறுத்தல்கள் காரணமாக வேறு நாடுகளுக்குச் சென்று தஞ்சம் கோருவதற்கு பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிமை உண்டு' என குறிப்பிடும் போது மியன்மார் ரோஹிங்யா அகதிகள் தொடர்பிலும் ஐ.நா பிரகடனம் நடைமுறைப்படுத்த வேண்டும். - என வலியுறுத்தினார்.

இலங்கை அரசியல் தலைவர்கள் மியன்மார் ரோஹிங்யா அகதிகள் தொடர்பில் ஒன்றுபட வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.



காலைக்கதிர் Kalaikkathir

# 8 இந்திய மீனவருக்கும் விளக்கமறியல்

மன்னார் வளைகுடா கடற்பரப்பில் ஞாயிற்றுக் கிழமை கைது செய்யப்பட்ட 8 இந்திய மீனவர்களும் எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த 8 இந்திய மீனவர்களும் கடற்படையினரால் கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்நிலையில், கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற பதில் நீதிவான் முன்னிலையில் அந்த மீனவர்களை ஆஜர்படுத்தியபோதே விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

# அம்பாறை மாவட்டத்தில் 'தூய ஸ்ரீலங்கா' நிகழ்வு

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசத்தின் 'தூய ஸ்ரீலங்கா' நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை நிந்தவூர் பிரதேச சபை வளாகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நிந்தவூர் பிரதேசசபையின் செயலாளர் எஸ்.சிஹாபுதீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஏ.ஆதம் பாவா, அஸ்ரப் தாஹீர் ஆகியோர் கலந்து கொண்டு கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தை ஆரம்பித்து வைத்தனர்.

விசேட அதிதிகளாக, நிந்தவூர் பிரதேச செயலாளர் அப்துல் லத்தீப், தேசிய மக்கள் சக்தியின் நிந்தவூர் பொறுப்பாளர் சம்சுல் அலி, நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியக செயலாளர் எஸ்.எம்.ஆரீப் உட்பட பிரதேச சபை உத்தியோகத்தர்கள், கட்சி முக்கியஸ்தர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம்பாவாவினால் தேசியக்கொடி ஏற்றப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் தொடர்பில் தெளிவான விளக்கத்தையும் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம்பாவா வழங்கினார்.

இறுதியாக பாதைகள் மற்றும் வெற்று வளவுகளில் உள்ள குப்பை கூழங்கள் அகற்றும் பணியையும் அதிதிகள் தொடக்கிவைத்தனர்.







# ஊடக மைய உறுப்பினர்களுக்கு விருது வழங்கிக் கௌரவிப்பு

(இல்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை ஊடக மைய உறுப்பினர்களுக்கு தங்களின் உயரிய பங்களிப்புக்காக டேலன்ட் பிளஸ் டிவியின் கௌரவிப்பு நிகழ்வில் விருதுகள் வழங்கி கௌரவிக்கபட்டது. இந் நிகழ்வானது சம்மாந்துறை அப்துல் மஜீத் மண்டபத்தில், சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வு டேலன்ட் பிளஸ் டிவி கலை கலாசார அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த விழாவில் ஊடகத் துறையில் செய்தி வழங்கல், தொகுப்பாளர் பணிகள், கலைநயமான நிகழ்ச்சிகள் மற்றும் சமூக சேவைகளில் சிறந்த பங்களிப்பை வழங்கிய சம்மாந்துறை ஊடக மைய உறுப்பினர்கள் விருதுகளால் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த விருதுகள், அவர்கள் செய்தி வழங்கல், சமூக விழிப்புணர்வு மற்றும் மக்களுக்கான தகவல் பரப்புவதில் செய்த பங்களிப்புகளை அங்கீகரிக்கும் விதமாக வழங்கப்பட்டன.

இந்நிகழ்விற்கு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம, சம்மாந்துறை பிரதேச செயலாளர் தேசபந்து எஸ்.எல்.எம். ஹனீபா, 241 படைப்பிரிவின் பொதுமக்கள் தொடர்பாடல் உத்தியோகத்தர் மேஜர் ஜானகசுபசிங்க, பொலநறுவை மாவட்ட சிரேஸ்ட பொறியியலாளர் எம்.எஸ்.எம். நவாஸ், சம்மாந்துறை வலயக் கல்வி பணிப்பாளர் எஸ்.மகேந்திரகுமார், சம்மாந்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஏ.எம்.நௌபர், மட்டக்களப்பு சம்மாந்துறை சிலியட் உயர் கல்வி நிறுவனத்தின் பிரதம கணக்காளர் எஸ்.எம்.ஜிப்ரி என பலரும் கலந்து கொண்டனர்.



# மூளையில் கட்டிகளை அடையாளம்காண நிந்தவூரில் புதிய இயந்திரம் கண்டுபிடிப்பு

(பாறுக் ஷிஹான்)

மூளையில் உள்ள கட்டிகளை அடையாளம் காண்பதற்கு வரதராஜன் டிலக்சனால் புதிய இயந்திரம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நிந்தவூரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரியில் தொழில்நுட்ப பிரிவில் கல்வி பயின்று யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்லூரிக்கு சென்ற வரதராஜன் டிலக்சன் அவர்களால், மூளையில் உள்ள கட்டிகளை அடையாளம் காணும் செயற்திட்டம் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டது.

இவர் யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்லூரியின் மெகாட்ரானிக் பொறியியல் தொழில்நுட்பம் பிரிவின், இறுதி ஆண்டு மாணவராவார்.



# மாணவியை வைத்து பாலியல் தொழில் கிளி, புதுக்குடியிருப்பில் மூவர் கைது

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பகுதியில் பாடசாலை மாணவி ஒருவரை வைத்து பாலியல் தொழில் நடத்தி வந்த குற்றச்சாட்டில் குடும்ப பெண் ஒருவரும், அவரது கணவரும் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பாக கிளிநொச்சியிலும் ஒரு பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு கோம்பாவில் பகுதியில் கிளிநொச்சியை சேர்ந்த 14 வயது சிறுமி ஒருவரை மூன்று மாதங்களாக அழைத்து வீட்டில் வைத்து விபசார தொழிலில் இவர்கள் ஈடுபட்டு வந்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

பின்னர் குறித்த சிறுமி கிளிநொச்சியில் உள்ள தனது வீட்டிற்கு சென்றுள்ளார். குறித்த சிறுமியின் உடலில் ஏற்பட்ட மாற்றத்தை அவதானித்த பெற்றோர் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்த்த பின்னர் சிறுமி பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகியிருந்தமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து கிளிநொச்சி வைத்தியசாலை பொலிஸார் பாதிக்கப்பட்ட சிறுமியிடம் விசாரணை செய்தபோது குறித்த சிறுமிக்கும் கிளிநொச்சியில் ஒரு பெண்ணுக்கும் பழக்கம் ஏற்பட்டுள்ளது. பின்னர் அந்த பெண் மூலமாக புதுக்குடியிருப்பு பெண்ணுக்கும் சிறுமிக்கும் தொடர்பு ஏற்படுத்தப்பட்டு சிறுமிக்கு பண ஆசையைக் காட்டி சிறுமி புதுக்குடியிருப்பு கோம்பாவில் பகுதியில் உள்ள பெண் வீட்டிற்கு அழைக்கப்பட்டு மூன்று மாதங்கள் குறித்த சிறுமி தங்கியிருந்துள்ளார்.

குறித்த பெண் சிறுமியை வைத்து தொழில் செய்து பணத்தைச் சிறுமிக்கு கொடுக்க மறுத்ததனை தொடர்ந்தே சிறுமி வீட்டை விட்டு வெளியேறி சென்றுள்ளார். பின்னர் கிளிநொச்சி பொலிஸாரால் கிளிநொச்சியில் ஒரு பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதனைத் தொடர்ந்து புதுக்குடியிருப்பு பொலிஸிற்கு தகவல் வழங்கப்பட்டதனை தொடர்ந்து புதுக்குடியிருப்பு குடும்ப பெண்ணும் கணவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை புதுகுடியிருப்பு மற்றும் கிளிநொச்சி பொலிஸார் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# வாகன இறக்குமதியால் மீண்டும் டொலர் பற்றாக்குறை ஏற்படும்

## பொருளாதாரப் பேராசிரியர் கருத்து

வங்கி கடனுக்கான வட்டிவீதம் குறைவாக காணப்படுகின்ற நிலையில் முறையான திட்டமிடல் இன்றி, தூரநோக்கற்ற வகையில் வாகனங்களை இறக்குமதி செய்தால் மீண்டும் 'டொலர்' கையிருப்பில் பற்றாக்குறை ஏற்படும். அது பொருளாதாரத்துக்கு சாதகமாக அமையாது என வாகன இறக்குமதி தொடர்பில் பேராதனை பல்கலைக்கழகத்தில் பொருளாதார துறையின் சிரேஷ்ட பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்தார்.

பொருளாதார பாதிப்பினால் வெளிநாட்டு கையிருப்பு வரையறுக்கப்பட்டதைத் தொடர்ந்து வாகன இறக்குமதி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது.

சர்வதேசநாணயநிதியத்தின் நீட்டிக்கப்பட்ட கடன் ஒத்துழைப்பு உத்தரவாதம், வெளிநாட்டு கையிருப்பை உறுதிப்படுத்தல் ஆகிய சாதகமான காரணிகளை அடிப்படையாகக் கொண்டு மூன்று கட்டமாக வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு இலங்கை மத்திய வங்கி அனுமதியளித்ததைத் தொடர்ந்து அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது.

இதற்கமைய பெப்பரவரி முதலாம் திகதி முதல் வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கும் வகையில் வாகன இறக்குமதி வரி சனிக்கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

உற்பத்தி தினத்தில் இருந்து 10 ஆண்டுகளுக்கு மேற்படாக செயற்திறன் காலத்தைக் கொண்டுள்ள வாகனங்களுக்கு 200 முதல் 300 சதவீதமளவில் வரி விதிக்கப்பட்டுள்ள நிலையில் வாகனங்களின் கொள்வனவு விலை நூற்றுக்கு 20 சதவீதமளவில் உயர்வடையும் என தொழிற்றுறையினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வாகன இறக்குமதி முறையான திட்டமிடலுக்கமைய ஒழுங்கமைக்கப்படாவிடின் மீண்டும் வெளிநாட்டு கையிருப்பு பற்றாக்குறை தோற்றம்பெறும் என பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வாகன இறக்குமதி தொடர்பில் பேராதனை பல்கலைக்கழகத்தில் பொருளாதார துறையின் சிரேஷ்ட பேராசிரியர் வசந்த அதுகோரல குறிப்பிடுகையில், புதிய வரித் திருத்தத்துக்கு அமைய வாகனத்தின் கொள்வனவு விலை உயர்வடையுமா என்ற சந்தேகம் பொதுமக்கள் மத்தியில் காணப்படுகிறது. ஆனால் பெரும் மாற்றம் ஏற்படும் என்று குறிப்பிட முடியாது என்றார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வாகன இறக்குமதியின்போது கடந்த காலங்களில் அமுல்படுத்தப்பட்ட வரிக் கொள்கைக்கு அமைவாகவே வரி திருத்தம் செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இலங்கையின் சந்தையில் தனித்த விலை காணப்படுகிறது. 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இறக்குமதி செலவு 20 பில்லியனை காட்டிலும் அதிகளவில் காணப்பட்டது.

வட்டிவீதம் மிகவும் குறைவான மட்டத்தில் காணப்பட்டமை அதற்கு பிரதான காரணியாகும். நாட்டில் மீண்டும் அவ்வாறான நிலை தோற்றம் பெற்றுள்ளது. வட்டிவீதம் மிகவும் குறைவான மட்டத்தில் காணப்படுகிறது.

நாட்டின் தேவையைக் கருத்திற்கொள்ளாமல் வாகன இறக்குமதிக்கு அனைவருக்கும் வாய்ப்பளித்தால் பெருமளவானோர் கடன் பெற்று வாகனங்களை இறக்குமதி செய்ய முற்படுவார்கள். அதனால் வெளிநாட்டு கையிருப்பு நாட்டை விட்டு வெளியேறும். இறக்குமதி செலவு உயர்வடையும். இவ்வாறான செயற்பாடுகள் பொருளாதாரத்துக்குச் சாதகமானதாக அமையாது.

இறக்குமதி செலவுகளை இயலுமான அளவில் குறைத்துக் கொண்டு ஏற்றுமதிகளை அதிகரித்துக் கொண்டு பண்ட கணக்குகளின் துறைகளை நிலையான தன்மையில் பேண வேண்டும். வாகன இறக்குமதி செலவு உயர்வடைந்தால் மத்திய வங்கியின் வெளிநாட்டு கையிருப்பில் பற்றாக்குறை ஏற்படும்.

பொருளாதார பாதிப்பில் காரணமாகவே வாகன இறக்குமதி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. ஆகவே வாகன இறக்குமதி திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கப்பட வேண்டும். இல்லையேல் மீண்டும் பொருளாதார நெருக்கடி தோற்றம் பெறும் என்றார்.

## சஜித்தின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பான கலந்துரையாடல்களால் பயனனில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார்.

கம்பஹா பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினரிடம் ஐக்கிய மக்கள் சக்திக்கு, ஐக்கிய தேசியக் கட்சி விடுத்துள்ள திறந்த அழைப்பு தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கேள்வி:- ஐக்கிய மக்கள் சக்தியையும் ஐக்கிய தேசியக் கட்சியையும் இணைக்க கலந்துரையாடல்கள் இடம்பெறுகிறதா?

பதில் : ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவின் தலைமைத்துவத்தின் கீழ் ஐக்கிய தேசியக் கட்சியுடன் மாத்திரமல்ல இதர அனைத்து அரசியல் கட்சிகளுடன் ஒன்றிணைவது குறித்து கலந்துரையாட நாம் எதிர்பார்த்துள்ளோம். குறிப்பாக ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து எதிர்கால அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுக்க நாம் தயாராக உள்ளோம்.

எனவே இவ்விரு கட்சிகளிலும் உள்ளவர்கள் தங்களது தற்போதைய அரசியல் நிலைமை என்ன என்பது தொடர்பில் அறிந்து கொள்ள வேண்டும். எதேச்சாதிகாரமாக செயற்படாமல் அனைவரையும் ஒன்றிணையுமாறு நாம் அழைப்பு விடுக்கிறோம் என்றார்.

கேள்வி: -இந்த இரு கட்சிகளும் ஒன்றிணைந்தால் தலைமைத்துவத்தில் சிக்கல் நிலை ஏற்படும் எனக் கூறப்படுகிறது அல்லவா?

பதில்-:அவர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ள நாம் தயாராக உள்ளோம். அதில் மாற்றுக் கருத்தில்லை. ஐக்கிய மக்கள் சக்தியே பிரதான எதிர்க்கட்சி என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தலின் அடைவை கருத்திற்கொண்டு இந்த கலந்துரையாடல்களை மேற்கொள்வது சிறந்தது. அவ்வாறில்லையெனில் இந்த நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலைமை ஏற்படும் என்றார்.

## மக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் தைப்பொங்கல் வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அறுவடைத்திருநாள் என்று பொருள்படும் தைப்பொங்கல் உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் மற்றும் இந்துக்களால் மிகுந்த பக்தியுடன் கொண்டாடப்படுகிறது. நிறைவான அறுவடைக்கு பங்களித்த சூரியன் பூமி மழை மற்றும் பசுக்கள் உபகரணங்களுக்கு நன்றி செலுத்துவது இந்த நாளின் சிறப்பம்சமாகும். இந்த விழா 'தை மாதத்தின் முதல் நாளில்

கொண்டாடப்படுகிறது. சூரியனின் வடக்கு நோக்கிச் செல்லும் உத்தராயணம், தைப் பொங்கல் நாளில் தொடங்குகிறது. புதிய திசையை நோக்கிச் செல்லல் மனித சமூகத்தின் உள்ளக-வெளிப்புற சகவாழ்வு என்பனவே தைப்பொங்கல் பண்டிகையின் அர்த்தமாகும்.

இந்த நாட்டு மக்களின் நற்பண்புகள், நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு என்பவற்றை மேம்படுத்தி சமூக மாற்றத்திற்கான ஆரம்ப முயற்சியாகவும் சுற்றுச்சூழல் மற்றும் நெறிமுறைக்கான புதிய ஒரு திசையின் தொடக்கமாக கிளீன் ஸ்ரீ லங்கா திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ள சமயத்தில் தைப் பொங்கல் பண்டிகையைக் கொண்டாடுவது மகிழ்ச்சி அளிக்கிறது.

வரலாற்று ரீதியாக வேரூன்றிய ஆசிய மரபுகளில் மனிதனுக்கும் சுற்றுச்சூழலுக்கும் இடையிலான பிணைப்பு பிரிக்க முடியாதது. தைப்பொங்கல் தினத்தால் வெளிப்படுத்தப்படும் அந்த மரபுகள் இந்த திட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. அதேபோல் தைப்பொங்கல் கொண்டாட்டம் மக்களின் கலாச்சார வாழ்வில் புதிய நம்பிக்கைகளை கட்டியெழுப்புகிறது.

நாட்டில் உருவாகியுள்ள புதிய உத்வேகத்துடன் இலங்கையர்களாகிய நம் அனைவருக்கும் அழகான வாழ்க்கை என்ற நம்பிக்கையை நம் இதயங்களில் சுமந்து புத்தாண்டில் புதிய உற்சாகத்துடன் முன்னோக்கிக் கொண்டு செல்லும் வாய்ப்பு கிடைத்துள்ளது. அதற்காக சுற்றுச்சூழல் முன்னேற்றத்திற்கு உகந்த முன்னுரிமை அளிக்கும் ஒரு புதிய கலாசார நெறிமுறை இருப்பை உருவாக்குவதன் மூலம் நிலையான அமைதி நல்லிணக்கம் என்பவற்றை மேம்படுத்துவதற்குத் தேவையான கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் தலைமைபொறுப்பு மற்றும் பொறுப்புக்கூறலை நாங்கள் ஏற்கிறோம்.

நாட்டிற்கும் மக்களுக்கும் பல நல்ல விடயங்களை நிறைவேற்ற உறுதி பூண்டு, நாட்டின் பொறுப்பை ஏற்றுக்கொண்ட நாங்கள் அந்த வாக்குறுதிகளை தடைகளுக்கு மத்தியிலும் பின்வாங்காத துணிச்சலுடனும் அசைக்கமுடியாத உறுதியுடனும் நிறைவேற்ற உறுதிபூண்டுள்ளோம்.

இந்த நாட்டு மக்களின் முகங்களில் நீடித்த புன்னகையைக் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்ட இந்த செயற்பாட்டில், புதிய அணுகுமுறைகளுடன், ஒற்றுமையுடனும், பங்கேற்புடனும் ஒன்றிணைய உங்கள் அனைவருக்கும் அழைப்புவிடுக்கிறேன். சுபமான ஆரம்பத்திற்கு இந்தப் பொங்கல் கொண்டாட்டம் பாரிய ஆசீர்வாதமாக அமைய வேண்டும் என்று நான் பிரார்த்திக்கிறேன். இலங்கை மற்றும் உலகளாவிய இந்துபக்தர்கள் அனைவருக்கும் நல்லிணக்கம் மற்றும் நன்றியுணர்வு நிறைந்த, வளமான மற்றும் மகிழ்ச்சியான தைப்பொங்கல் திருநாள் நல்வாழ்த்துக்கள் என்றுள்ளது.

## ஐ.தே.கட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணைய உள்ளதாகக் கூறப்படுகிறது. இது தொடர்பில் உங்களுடைய நிலைப்பாடு என்ன?

பதில் -: ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய தேசிய கட்சியும் இணைய வேண்டும் என ஒரு தரப்பினர் விரும்புகின்றனர். சிலர் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். எதிர்கா லத்தில் கட்சியை மறுசீரமைப்பு செய்து கட்சியின் தலைவர் தனது குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டும்.

அவ்வாறில்லையெனில் ஐக்கிய மக்கள் சக்தியின் பெரும்பாலான உறுப்பினர்கள் கட்சியிலிருந்து விலகி முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து கொள்வர். ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைய நான் எதிர்பார்க்கவில்லை. தொடர்ந்தும் ஐக்கிய மக்கள் சக்தியிலேயே இருப்பதற்கு எதிர்பார்க்கிறேன். கட்சியின் தலைவரே இது தொடர்பில் தீர்மானம் எடுக்கவேண்டும்.

கேள்வி: - கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாச ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவதாகக்கூறினால் நீங்கள் இணைந்து கொள்வீர்களா?

பதில்: - அது பற்றி சிந்திக்க வேண்டும். அவ்வாறு நடக்கும் என நான் எதிர்பார்க்கவில்லை. ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி எவ்வாறானது என்பதை என்னைவிட எமது கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாச நன்கறிவார்.

எனவே சஜித் பிரேமதாச கட்சியை மீளக் கட்டியெழுப்ப வேண்டும். அவர் சிறந்த தலைவராக செயற்பட வேண்டும். எதிர்க்கட்சிக்கு உள்ள பொறுப்புக்களைச் சரிவர நிறைவேற்ற வேண்டும். அவ்வாறு செயற்பட்டால் ரணில் விக்கிரமசிங்கவின் ஒத்துழைப்பு எமக்கு அவசியமில்லை. ஐக்கிய மக்கள் சக்தியிலேயே அதிக நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சியில் அவ்வாறில்லை. இந்த இரு கட்சிகளும் ஒன்றிணைய வேண்டிய அவசியமில்லை. இதுவே எனது தனிப்பட்ட கருத்தாகும் என்றார்.

## இறக்குமதி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதிலளிப்பதை விடவும், பொதுமக்களுக்கு மருந்துகளை விநியோகம் செய்வதற்கு முன்னதாக பரிசோதனை செய்வதே மேலானது. ஆகவே மருந்துகளை ஆய்வு செய்வதற்கான பல ஆய்வகங்களை திறப்பதற்கு ஆளும்தரப்பு நடவடிக்கைகளை எடுக்கவுள்ளது.

மருந்து இறக்குமதி தொடர்பாக நிறுவனமொன்றுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணைகள் எதிர்வரும் நாட்களில் முன்னெடுக்கப்படவுள்ளன.

அதேநேரம், இலங்கையின் சுகாதார அமைப்பு மற்றும் மருந்து விநியோக செயல்முறைகள் விரிவானவை என்பதை அடிப்படையாகக் கொண்டு அவதானமான நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகின்றோம் என்றார்.

## பொறுப்புக்களை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்

தைப்பொங்கலை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டு;ள்ளதாவது,

தைப்பொங்கல் என்கிற அறுவடைத் திருவிழா உலகெங்கிலும் உள்ள தமிழ் மக்களால் கொண்டாடப்படும் கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த விழாவாகும். மரபு ரீதியாக அறுவடைக் காலத்தில் கொண்டாடப்படும் இந்த விழா நன்றியுணர்வு மற்றும் செழிப்புடன் தொடர்புடையது. தைப்பொங்கலின் உண்மையான பொருளை புரிந்துகொள்வது மிகவும் முக்கியமானது.

விவசாய வாழ்க்கைமுறையில், ஒருவரின் பொருளாதாரத்தையும் வாழ்க்கையையும் வலுப்படுத்தி, பயிர்களை செழிப்பாக்க உதவிய சூரியன், மழை, இயற்கை மற்றும் கால்நடைகளுக்கு நன்றி தெரிவிக்கப்படுகிறது. இதன் மூலம், நன்றி செலுத்துதல் என்ற பெரிய பாடம் கற்பிக்கப்படுகிறது, இதனை எதிர்கால சமுதாயத்தில் முறையாக உள்வாங்குவது நமது பொறுப்பாகும்.

ஒரு நாட்டின் மக்களுக்கான பொறுப்பை ஏற்றுள்ள ஆளும் கட்சிக்கு, பொதுமக்களின் பொறுப்புகளை நிறைவேற்றுவது என்பது, அந்த அதிகாரத்தை வழங்கிய மக்களுக்கு செலுத்தப்படும் நன்றி மற்றும் பொறுப்புணர்வின் வெளிப்பாடாகும் என்பதை தைப்பொங்கல் விழாவின் உட்பொருளை சரியாக புரிந்துகொள்வதன் மூலம் உணரலாம்.

ஆரம்பத்தில் விவசாய சமூகத்திற்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருந்த இந்த விழா, இன்று இன, மத வேறுபாடுகளைக் கடந்து அனைத்து தமிழ் மக்களின் தேசிய விழாவாக மாறியுள்ளது. பல்மத, பல்லின, பல்மொழி சமூகம் கொண்ட நமது தாய்நாட்டில், பன்முகத்தன்மையில் ஒற்றுமையை ஊக்குவிக்கும் மற்றொரு தேசிய விழாவாக தைப்பொங்கல் விழாவை ஒன்றிணைந்து கொண்டாடுவது நமது கலாசார பாரம்பரியத்தை பாதுகாக்க உதவும்.

ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றைக் கொண்ட தைப்பொங்கல் விழாவை கொண்டாடும் இலங்கை வாழ் சகோதர சகோதரிகளுக்கு பெரும் மகிழ்ச்சியுடன் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம். அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

## மருத்துவத்து.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயல்பாடுகளை மிகவும் முறையாகவும் வெளிப்படையாகவும் செயல்படுத்த நிர்வாக அதிகாரியுடன் நீண்ட கலந்துரையாடலும் நடத்தப்பட்டது.

மருந்து விநியோக வலையமைப்பு மற்றும் அதன் தற்போதைய செயல்பாடு, மருந்து கொள்முதல் செயல்முறை மற்றும் மருந்து விநியோகத் திட்டம் மற்றும் எதிர்காலத்தில் இந்த நடவடிக்கைகள் எவ்வாறு உருவாக்கப்பட வேண்டும் என்பது குறித்து சுகாதார அமைச்சர் நிர்வாக அதிகாரிக்கு அறிவுறுத்தல்களை வழங்கியதாகக் கூறப்படுகிறது.

# மாணவியின் கடத்தலுக்கு பண விவகாரமே காரணம்

பாடசாலை மாணவியை கடத்திச் சென்ற நிலையில் கைது செய்யப்பட்ட இளைஞன்மாணவியைகடத்தியமைக்கான காரணத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

குறித்த சந்தேகநபர், தனது மாமாவின் மகளையே இவ்வாறு கடத்திச் சென்றுள்ளதாக தெரிவித்துள்ளார்.

பொலிஸ் காவலில் உள்ள சந்தேகநபர், ஜப்பானில் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக வேலை செய்ததாகவும், அங்கு சம்பாதித்த பணத்தை தனது மாமாவிடம் கொடுத்ததாகவும் கூறியுள்ளார்.

பணம்தனக்குத்திருப்பித்தரப்படாததால், இதுபோன்ற செயலைச் செய்யத் தூண்டப்பட்டதாகவும் சந்தேகநபர் கூறியுள்ளார்.

தவுலகல பகுதியில் தொழிலதிபர் ஒருவரின் 18 வயது மகள் கடத்தப்பட்ட நிலையில், கடத்தப்பட்ட மாணவி மற்றும் சந்தேகநபரை கைது செய்ய 5 பொலிஸ் குழுக்களை பயன்படுத்தி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

அதன்படி, கடத்தலை மேற்கொண்ட சந்தேகநபரின் கைப்பேசி தரவுகளை பகுப்பாய்வு செய்ததில், சந்தேகநபர் அம்பாறை பொலிஸ் பிரிவில் இருப்பது தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக அம்பாறை பொலிஸ் நிலையத்திற்குதகவல்தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, சந்தேகநபரும் சிறுமியும் இன்று (13) காலை அம்பாறை பேருந்து நிலையத்திலிருந்து கண்டிக்கு புறப்படும் சொகுசு பேருந்தில் இருந்தபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர் பொலிஸ் காவலில் இருப்பதாகவும், சிறுமியை வைத்தியரிடம் அனுப்புவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

# கிணற்றில் தவறி வீழ்ந்து 2 வயதுக் குழந்தை சாவு

## ஏறாவூரில் நேற்றுச் சோகம்

இரண்டு வயது பெண் குழந்தை கிணற்றில் தவறி வீழ்ந்து நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் நேற்று பிற்பகல் 3 மணியளவில் மட்டக்களப்பு ஏறாவூரில் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஏறாவூர் இரண்டாம் பிரிவு மக்கா மடி வீதியைச் சோந்த முகமட் ஷரகீர் ஜப்பிரா என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது

வீட்டிற்கு வெளியே விளையாடிக்கொண்டிருந்த குழந்தை கிணற்றுக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த கதிரையில் ஏறி கிணற்றை எட்டிப்பார்க்க முயன்றபோது கிணற்றுக்குள் தவறி வீழ்ந்துள்ளது.

மாலை 6.00 மணியளவில் குழந்தையை காணவில்லை என பெற்றோர் தேடிய போதே கிணற்றுக்குள் குழந்தை வீழ்ந்து கிடப்பது கண்டுபிடிக்கப்பட்டது. உடனடியாக குழந்தையை மீட்டு வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போதும் குழந்தை ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இதணையடுத்து குழந்தையின் உடல் பிரேத பரிசோதைனைக்காக வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. பெற்றோரின் கவனயீனத்தால் குழந்தை உயிரிழந்துள்ளது எனத் தமது ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# சம்மாந்துறை வாசி மின் தாக்கி இறப்பு

(தில்சாத் பர்வீஸ்)

வீட்டில் வேலை செய்து கொண்டிருந்தபோதே சம்மாந்துறையைச் சேர்ந்த ஆண் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார். இச்சம்பவம் நேற்று முற்பகல் வேளையில் நடைபெற்றுள்ளது.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு சென்னக் கிராமம் பகுதி மலையடிக் கிராமம் 3 பகுதியைச் சேர்ந்த 60 வயது நபரே மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார். சடலம் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைசம்மாந்துறைபொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# பதில் அமைச்சர்கள் ஐந்து பேர் நியமனம்

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வெளிநாடு செல்லும் நிலையில் ஐந்து அமைச்சுக்களுக்கு பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் கீழ் உள்ள மூன்று அமைச்சுக்களான டிஜிட்டல் பொருளாதார அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு மற்றும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஆகிய 3 அமைச்சுக்களுக்கும் வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில்விமானபோக்குவரத்து அமைச்சு என்பவற்றுக்குப் பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி, டிஜிட்டல் பொருளாதார பதில் அமைச்சராக டிஜிட்டல் பொருளாதாரபிரதிஅமைச்சர் பொறியியலாளர் எரங்க வீரரத்னவும், பாதுகாப்பு பதில் அமைச்சராக பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜெயசேகரவும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பதில் அமைச்சராக நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெருமவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வெளிவிவகார, வெளிநாட்டுவேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை பதில் அமைச்சராக வெளிவிவகாரபிரதிஅமைச்சர் அருண் ஹேமச்சந்திரவும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து பதில் அமைச்சராக வைத்தியர் பிரசன்னகுமாரகுணசேனவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.



# கடத்தப்பட்ட மாணவியை காக்க முயன்றவர் காயம்

## சம்பவம் குறித்து அவர் வாக்குமூலம்

கம்பளை, தவுலகல பிரதேசத்தில் இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்ட 16 வயது மாணவியைக் காப்பாற்ற முயன்ற இளைஞர் காயமடைந்துள்ளார். சம்பவம் தொடர்பில் அவர் அளித்துள்ள வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளதாவது:

நான் அந்த வாகனத்திற்குள் ஓரளவு ஏறிவிட்டேன் அந்த மாணவியை விடுவிக்க முயன்றேன் என அவர் தெரிவித்துள்ளார்.

வாகனத்தில் மூவர் இருந்தனர்,அவர்கள் தொடர்ந்து வாகனத்தை செலுத்தினார்கள் என்னை வாகனத்திலிருந்து கீழே தள்ளிவிட்டனர் என அவர் தெரிவித்துள்ளார்.

நான்வீதியில் விழுந்தேன் அவ்வேளை தலை கைகாலில் காயங்கள் ஏற்பட்டன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சனிக்கிழமை மாலை மாணவியொருவர் கடத்தப்படுவதை காண்பிக்கும் வீடியோ வெளியாகியுள்ளது.அந்த மாணவியை காப்பாற்ற முயன்றமைக்காக இளைஞனை சமூக ஊடகங்களில் பலர் பாராட்டியுள்ளனர்.

ஹந்தெச பகுதியில் விடுதியொன்றில் தங்கி கல்விகற்றுவந்த மாணவி தனது நண்பிகளுடன் பாடசாலைக்கு சென்றுகொண்டிருந்த வேளையே கடத்தபட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாணவியை கடத்தியவர் மாணவியின் தந்தை வழி உறவினர் என தெரிவித்துள்ள பொலிஸார் திருமண விவகாரமே இதற்கு காரணம் என குறிப்பிட்டுள்ளனர்.

வாகனச்சாரதியை கைது செய்துள்ள பொலிஸார் வாகனத்தை கைப்பற்றியிருந்தனர். இதேவேளை, நேற்று (திங்கட்கிழமை) அம்பாறையில் மாணவி கண்டுபிடிக்கப்பட்டார். கடத்தலில் ஈடுபட்ட சந்தேகநபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.



நேற்று காலை அம்பாறை பஸ் நிலையத்தில் இருந்து கண்டிக்கு செல்வதற்காக பஸ்ஸில் காத்திருந்தபோதே மாணவியும் சந்தேக நபரும் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் ஞாயிற்றுக்கிழமை இரவு அம்பாறை பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் இருந்தனர் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

கடத்தப்பட்ட மாணவியையும் சந்தேக நபரையும் கண்டுபிடிக்க 05 பொலிஸ் குழுக்களை பயன்படுத்தி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் இக்குழுக்களின் தேடுதல் நடவடிக்கையின்போதே நேற்று காலை மாணவியையும் சந்தேக நபரையும் கண்டுபிடித்து, இருவரிடமும் விசாரணை நடத்தி வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.



# 45 லட்சத்து 87 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரட்டுகளுடன் இருவர் கைது



சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 45லட்சத்து87ஆயிரம்ரூபாபெறுமதியான வெளிநாட்டு சிகரட்டுகளுடன் இரண்டு சந்தேக நபர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

கண்டி, பலகொல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞன் ஒருவன் இந்தியாவிலிருந்து நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இதன்போது, சந்தேக நபர் கொண்டு வந்த பயணப்பொதியிலிருந்து 4,780 வெளிநாட்டு சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்நிலையில், கொனவல பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய வர்த்தகர் ஒருவர் டுபாயிலிருந்து நேற்று அதிகாலை 03.40 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இதன்போது, சந்தேக நபர் கொண்டு வந்த பயணப்பொதியிலிருந்து 25,800 வெளிநாட்டு சிகரட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் எதிர்வரும் 15 மற்றும் 22 ஆம் திகதிகளில் நீர்கொழும்பு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கசிப்பு விற்பனையில் ஈடுபட்டவர் கைது

## மல்வத்தையில் சம்பவம்



(தில்சாத் பர்வீஸ்)

வீட்டில் சூட்சுமமான முறையில் மறைத்து வைத்து கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட சந்தேகநபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். அத்தோடு விற்பனைக்காக இருந்த கசிப்பையும் சம்மாந்துறை பொலிஸ் நிலைய ஊழல் தடுப்பு பிரிவினர் கைப்பற்றி உள்ளனர்.

இச்சம்பவம் நேற்று (திங்கட்கிழமை) காலை 10.30 மணியளவில் நடைபெற்றுள்ளது.

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மல்வத்தை, திருவள்ளுவர்புரம் பகுதியில் கசிப்புடன் நேற்று (திங்கட்கிழமை) காலை 10.30 மணியளவில் சம்மாந்துறை ஊழல் தடுப்பு பிரிவினரினால் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்மாந்துறை ஊழல் தடுப்பு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை நடவடிக்கையின் போது 45 வயதுடைய சந்தேக நபர் கசிப்புடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதான சந்தேக நபரிடமிருந்து 15000 மில்லி லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டதுடன், சந்தேக நபர் உள்ளிட்ட சான்றுப்பொருள்களை சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், குறித்த சோதனை நடவடிக்கை சம்மாந்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஏ.எம். நௌபரின் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய ஊழல் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஆர்.எம். ரனதுங்க தலைமையில் பொலிஸ் உத்தியோகத்தர்களான சார்ஜன் அநுர, சார்ஜன் வி.டபிள்யூ. அசோக்க, சார்ஜன் டபிள்யூ.ஏ. சரத், சார்ஜன் விஜேரத்ன உள்ளிட்ட அதிகாரிகள் இச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# போதைப்பொருள்களுடன் ஏழு பேர் காத்தான்குடியில் கைது

மட்டக்களப்பு - காத்தான்குடி பொலிஸ் பிரிவில் பெருமளவிலான ஐஸ், கேரளா கஞ்சா, கசிப்பு ஆகிய போதைப்பொருள்களுடன் ஏழு பேர் கைதுசெய்யப்பட்டனர்எனகாத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடி பொலிஸார் ஞாயிற்றுக்கிழமை மாலை நடத்திய திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் நாவற்குடா, கல்லடி, பாலமுனை, காத்தான்குடி, தாளங்குடா ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

இவர்களிடமிருந்து 4 கிராம் 590 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள், 40 பொதிகளில் வைக்கப்பட்ட கேரள கஞ்சா, 21,000 மில்லி லீற்றர் கசிப்பு பொலிஸாரால் இதன்போது கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதுடன் காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தைப்பொங்கல் வாழ்வில் தனித்திருப்பம் அளிக்கும்!

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண் .... ஆஸ்திரேலியா




தையெங்கள் வாழ்வில் தலையாய மாதம்
தைபிறந்த பின்னால் வழிபிறக்கு மென்போம்
பொங்கலெனும் பரிசைச் சுமந்துவரும் மாதம்
தையெனவே எண்ணி தான்மகிழ்ந்து நிற்போம்

தைதொடங்கி விட்டால் தைரியமும் பெருகும்
தைப்பொங்கல் வாழ்வில் தனிதிருப்பம் அளிக்கும்
உள்ளமதில் உவகை ஊற்றெடுத்து நிற்கும்
உழைப்பதனை மனமும் ஏற்றுவிடத் துடிக்கும்

பொங்கலெனும் வார்த்தை பூரிப்பைக் காட்டும்
மங்கலமாய் பொங்கி மகிழ்கவென உணர்த்தும்
சொந்தமெலாம் சேர்ந்து நிற்கவெனச் சொல்லும்
சூழ்ந்திருந்து சுவையாய் சுவைக்கும்படி வைக்கும்

பட்டாசு மத்தாப்பு வாங்குவென வுரைக்கும்
பட்சணங்கள் செய்து பகிரவென்றும் பகரும்
புத்தாடை உடுத்துவென புத்தூக்கம் கொடுக்கும்
புத்தரிசி கொண்டுமே பொங்குவெனச் சொல்லும்

முற்றத்தில் கோலமிட்டு விளக்கேற்ற வைக்கும்
மூத்தோரின் கால்தொட்டு பணியும்படி வுரைக்கும்
அத்தையொடு மாமாவின் ஆசியையும் பெற்று
அணைத்துமே பொங்குவென அதுவுரைத்து நிற்கும்

புதுப்பானை எடுத்துப் பொங்கிலிடச் செய்யும்
பொங்கிவரும் பால்பார்க்க சுற்றிநிற்கச் சொல்லும்
பருப்போடு பச்சரிசி பானையிட வைக்கும்
பக்குவமாய் சர்க்கரையும் சேர்த்துவிடச் செய்யும்

பொங்கிவரும் பால்பார்த்து பூரிப்பு அடைவோம்
மங்கலங்கள்வாழ்வென்றும்நிறைகவெனநினைப்போம்
சங்கடங்கள் சாம்பலாய் ஆகவென எண்ணி
சகலருமே இறைவனிடன் தான்வேண்டி நிற்போம்

அறமுடைய அரசாட்சி அமைந்துவிட வேண்டும்
ஆன்மீகம் அகமதிலே அமர்ந்துவிட வேண்டும்
அறநினைப்பு அகமதிலே எழுந்துவிட வேண்டும்
அனைத்துக்கும் பொங்கல் வழிசமைக்க வேண்டும்

மாநிலத்தை வதைக்கும் போரகல வேண்டும்
மாநிலமே பூங்காவாய் ஆகிவிட வேண்டும்
மனவமைதி மனமகிழ்வு மனநிறைவு பெருக
மனமுருகி அனைவருமே வேண்டிடுவோம் வாரீர்

பாலாக இருப்போம் சர்க்கரையாய் இருப்போம்
பக்குவமாய் யாவருக்கும் சுவைகொடுத்து நிற்போம்
தேனாக இருப்போம் சேர்கவென அணைப்போம்
தினமுமே பொங்கலாய் ஆக்கிடுவோம் வாரீர்

# இந்திய மக்களின் பங்களிப்புடன் மாணவருக்கு கற்றல் உபகரணம்

பொங்கல் திருநாளை முன்னிட்டு இந்தியமக்களின்பங்களிப்புடன்சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட சுழிபுரம் மேற்கு கலைமகள் இலவசக் கல்வி நிலையத்தின் மாணவர்களுக்கு யாழ். இந்திய துணைத் தூதரால்கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இதன்போது மாணவர்களின் கலை நிகழ்வுகள்இடம்பெற்றன.தொடர்ச்சியாக 73 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லயன் றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி, யாழ். இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி, சங்கானை பிரதேச செயலர் திருமதி கவிதா உதயகுமார், யாழ், இந்திய துணைத் தூதரக அதிகாரிகளான நாகராஜன், செல்வி ரம்யா, கலைமகள் இலவசக்கல்வி நிலைய உப தலைவர் அருள் சிவானந்தன், அலைமகள் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தினர், கலைமகள்

சனசமூக நிலையத்தினர், சமூக மட்ட அமைப்பின் பிரதிநிதிகள், பெற்றோர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.




# தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்ட ரஷ்ய பிரஜை மாத்தறையில் மீட்பு

மாத்தறைபொல்ஹேனகடற்கரையில்நீராடிக்கொண்டிருந்த வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் நீரோட்டத்தில் சிக்கி கடல் அலையில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில், பொலிஸ் உயிர்காப்புப் பிரிவினரால் மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

நீரில் அடித்துச் செல்லப்பட்டு உயிர் பிழைத்த வெளிநாட்டவர் 37 வயதான ரஷ்ய பிரஜை ஆவார்.

பொலிஸ் உயிர்காப்புப் பிரிவில் கடமையாற்றிய பொலிஸ் சார்ஜன்ட் பிரியதர்ஷ, பொலிஸ் கான்ஸ்டபிள்களான ஜயவீர மற்றும் ஜயசுந்தர ஆகியோர் இணைந்து இந்த நபரை காப்பாற்றியுள்ளனர்.

# மருதங்கேணி நிதி நிறுவனத்தில் மோசடி செய்தார்என நபர் கைது

யாழ்ப்பாணத்தில், தனியார் நிதி நிறுவனம் ஒன்றில் மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதான நபர் ஒருவர் நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தனியார் நிறுவனம் ஒன்றின் மருதங்கேணி கிளையில் தான் அடகு வைத்த நகையில் மோசடி இடம்பெற்றுள்ளதாக மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாட்டின்பிரகாரம், விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் , குறித்த நிதி நிறுவனத்தில் பயணியாற்றும் உத்தியோகஸ்தர் ஒருவரை சந்தேகத்தில் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்திய நிலையில் , நீதிமன்று சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

குறித்த நிதி நிறுவனத்தில் இடம்பெற்ற மோசடி சம்பவம் தொடர்பில் மருதங்கேணி பொலிஸார் விரிவான விசாரணைகளை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.



# ஊடகவியலாளர் இருவருக்கு மருதமுனையில் கௌரவம்

(ஷினாஸ் )

மருதமுனை நாணல் கலை இலக்கிய வட்டம் அதன் ஊடக ஆலோசகர்களாக கடந்த நான்கு ஆண்டுகளுக்கு மேலாக செயற்பட்டு வரும் ஊடகவியலாளரும் அறிவிப்பாளருமான ஏ.எல்.எம்.ஷினாஸ் மற்றும் ஊடகவியலாளர் றாஸிக் நபாயிஸ் ஆகியோர் அண்மையில் கிழக்கு மாகாண ஊடகத் துறைக்கான இளங்கலைஞர் விருது வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டதை வாழ்த்தி 'முத்துக்களின் முற்றத்து மல்லிகை' எனும் கௌரவிப்பு நிகழ்வை மருதமுனை மண்ணில் நாணல் கலை இலக்கிய வட்டம் ஞாயிற்றுக்கிழமை நடத்தியது.



மருதமுனை பிரதேசத்தில் ஆற்றலுள்ள பெண்களை ஒன்றிணைத்து கடந்த நான்கு ஆண்டுகளுக்கு மேலாக செயற்பட்டு வரும் நாணல் கலை இலக்கிய வட்டம், அதன் ஆரம்ப செயற்பாடுகள் தொடக்கம் இறுதி வரை இவர்கள் ஆலோசகர்களாக செயற்பட்டனர்.

நாணல்கலைஇலக்கியவட்டத்தின்வளர்ச்சிக்கும் அது சமூகத்திற்கு ஆற்றி வரும் பங்களிப்புக்களை தேசிய ரீதியாக அடையாளப்படுத்துவதற்கு ஊடகவியலாளர்களான ஏ.எல்.எம்.ஷினாஸ், றாஸிக் நபாயிஸ் ஆகியோர் அளப்பெரிய பங்கை செய்திருக்கிறார்கள். இவர்கள் நாணல் கலை இலக்கிய வட்டத்தோடு இணைந்து பயணிப்பதில் எமது நாணல் கலை இலக்கிய வட்டம் பெருமை கொள்கிறது. உண்மையில் இவர்கள் தான் பிறந்த மருதமுனை மண்ணில் மணக்க வேண்டும் என்பதற்காக முதலில் நாம் இவர்களை நமது அமைப்பின் சார்பாக பாராட்டி கௌரவிப்பதில் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகிறோம். என்று இங்கு உரையாற்றிய நாணல் கலை இலக்கிய வட்டத்தின் தலைவியும் எழுத்தாளருமான ஆசிரியை பாத்திமா ஸுபா தெரிவித்தார்.

ரேன்ஜ் வியூ நிறுவனத்தின் அனுசரணையோடு நடைபெற்ற இந்த நிகழ்வில், ரேன்ஜ் வியூ நிறுவனத்தின் நிதி திட்டமிடல் பணிப்பாளர் தல்ஹா, கவிஞர் விஜிலி, மருதமுனையில் முதலாவது பெண் கவியாழினி மாஜிதா தவ்பிக் உட்பட நாணல் கலை இலக்கிய வட்டத்தின் உறுப்பினர்கள், ஆர்வலர்கள், குடும்ப உறுப்பினர்கள் என பலரும் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் போது ஊடகத்துறைக்கான இளங்கலைஞர் விருது பெற்றுக்கொண்ட ஏஎல்எம்.ஷினாஸ், றாஸிக் நபாயிஸ் ஆகியோரை பாராட்டி நாணல் வட்டத்தின் உறுப்பினர்கள் கவிதைகள் மற்றும் உரைகளை நிகழ்த்தியதோடு இறுதியில் நாணல் கலை இலக்கிய வட்டம் இவர்களுக்கு நினைவு விருதினை வழங்கி பாராட்டி கௌரவித்தனர்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.01.2025இல் வெளியிடப்பெற்றது